OS No. 25/2015

வா.சா.1 சுந்தர்ராஜ்

நாள் - 17.02.2023

**<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்ற கேட்டு தாவா தாக்கல் செய்துள்ளேன். எதிர்வழக்குரையின் விவரம் எனக்குத் தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் எனக்கு மறந்து விட்டது. சர்வே என்னும் மறந்துவிட்டது. தாவா சொத்தில் மெத்தை வீடு உள்ளது. தாவா சொத்து முழுவதும் வீடு உள்ளது. தாவா சொத்து உள்ள பகுதியில் ஒரு சென்ட் ரூ.3 லட்சம் வரை போகும். வீடு கட்டுவதற்கு சதுர அடிக்கு ரூ.1 .50 லட்சம் வரை ஆகும் என்றால் எனக்குத் தெரியாது. சொத்தின் மதிப்பும் வீட்டின் மதிப்பும் தெரியாமல்தான் ஒப்பந்தம் செய்தேனா என்றால் புரோக்கர் மூலம்தான் ஒப்பந்தம் செய்தேன். அம்மாபேட்டையை சேர்ந்தவர் புரோக்கராக இருந்தார். சொத்தின் வில்லங்கம் வாங்கிப் பார்த்தேன். அது 1ம் பிரதிவாதிக்கு பாத்தியம். 2ம் பிரதிவாதியும் அதே வீட்டில் குடியிருந்ததால் அவரைம் சேர்த்து ஒப்பந்தம் எழுதிக் கொண்டோம். நரசம்மாளுக்கு எத்தனை ஆண் வாரிசுகள் என்று எனக்குத் தெரியாது. 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மகன். நரசம்மாளுக்கு அறிவழகன், ரவிக்குமார்., செந்தில்குமார், சௌந்தரராஜன் ஆகியோர் ஆண் வாரிகள் என்றால் எனக்குத் தெரியாது. செந்தில்குமாரைத் தவிர்த்து மற்றஆண் வாரிகளுக்கும் வா.சா.1ல் தரப்பினரோ சாட்சிகளோ இல்லை. தாவா சொத்து நரசம்மாள் மற்றும் அவரது ஆண் வாரிசுகள் அனைவருக்கும் பாத்தியம் என்றால் சரியல்ல. அதனால் இந்த கிரைய உடன்படிக்கை செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வீடு எந்த வருடம் கட்டப்பட்டது என்று எனக்குத் தெரியாது. அதன் சக்குபந்தி நினைவில்லை. 21.02.2014 ல் புதுப்பேட்டை சார்பாதிவாளர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. மீதி கிரையத் தொகை ரூ.25 ஆயிரத்தை செலுத்த எதற்கு ஒரு வருடம் காலக்கெடு என்றால் அப்போதைக்கு என்னிடம் பணம் இல்லை. சம்பாதித்துதான் கொடுக்க வேண்டிய சூழ்நிலை. வா.சா.ஆ.1 தேதிக்கு 15 நாளைக்கு முன்பு புரோக்கர் வந்து பேசினார். தாவா சொத்தில் செந்தில்குமார் மட்டும் வசிக்கிறார். அவருக்கு வேறு வீடு உள்ளதாக என்று எனக்குத் தெரியாது. பிரதிவாதிகளுக்கு வேறு வீடு இல்லை என்பதால் தாவா சொத்தை விற்க வேண்டிய அவசியம் இல்லை என்றால்

சரியல்ல. 2ம் பிரதிவாதி வட்டிக்கு என்னிடம்ரூ.50 ஆயிரம் கடன் வாங்கினால் என்றாலும் அதற்கு ஆதரவாகத்தான் வா.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கு எழுதப்படிக்கத் தெரியாது என்றாலும் அதனால் நான் அடமானப் பத்திரம் ஏழுதி வாங்காமல் சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் கிரைய உடன் படிக்கை எழுதி வாங்கிக் கொண்டேன் என்றால் சரியல்ல. தாவா நிலமும் வீடும் ரூ.10 லட்சத்திற்கு மேல் பொரும் என்றாலும்நான் சொற்பத் தொகைக்கு ஒப்பந்தம் எழுதி உள்ளேன் என்றாலும் சரியல்ல. 2ம் பிரதிவாதி வட்டியுடன் திருப்பி செலுத்த முன் வந்தபோது நான் ரூ.3 வட்டி கேட்டு கொடுக்காததால் தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புரோக்கர் குமார் மற்றும் சில நண்பர்கள் மூலம் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்க பிரதிவாதியிடம் கேட்டேன். நான் அவ்வாறு பிரதிவாதிகளைக் கேட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதன் பிறகுதான் நான் வழக்கறிஞரை அனுகினேன். வா.சா.ஆ.1 கடனுக்காக மட்டுமே எழுதப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 யை பத்திர எழுத்தர் முருகன் எழுதினார். குமார் மற்றும் சண்முகம் ஆகியோர் சாட்சி கையெழுத்து செய்தார்கள். எழுதப்படிக்கத் தெரியாதவர்களிடம் கிரைய உடன் படிக்கை எழுதி வாங்கினேன் என்றால் தாவா செலவுத் தொகையுடன் தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளை கிரையம் செய்து கொடுக்க கேட்டு அனுகவும் இல்லை உரிய காலத்தில் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. பாக்கி கிரையத் தொகையை நான் உரிய காலத்தில் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை என்றால் சரியல்ல.